## விசாரணை அறிக்கை

"Green Peace India Society" என்ற பெயரில் 13.06.2002-ல் சங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு அச்சங்கம் தென்சென்னை மாவட்டப்பதிவாளர் அலுவலகத்தில் சங்க எண்.377/2002-ஆக 22.7.2002-ல் பதிவு செய்யப்படுள்ளது. சங்கம் துவங்கப்பட்டபோது சங்கம்

எண்.6-3-வது அவென்யூ
பெசன்ட் நகர்
சென்னை – 600 090

என்ற முகவரியில் இயங்கிவந்துள்ளது. பின்னர், இச்சங்க அலுவலகம்

எண்47-2-வது குறுக்குத்தெரு,
எல்லையம்மன் காலனி
கோபாலபுரம்`
சென்னை – 600 086

என்ற மத்தியசென்னை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட முகவரிக்கு மாற்றப்பட்ட தீர்மானம் 25.6.2004-ல் நிறைவேற்றப்பட்டு அதற்கான படிவம்-V தென்சென்னை மாவட்டப்பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்டு 18.3.2005-ல் கோர்வைக்கு ஏற்கப்பட்டுள்ளது. அதன் பின் தென்சென்னை மாவட்டப்பதிவாளர் கடித எண்.2804/அ1/2005 நாள். 27.2.2006-ன்படி சங்கத்தின் கோப்புகள் மத்தியசென்னை மாவட்டப்பதிவாளர் அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக மத்தியசென்னை மாவட்டப்பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி சங்கம் 49/2006-ஆக 17.3.2006-ல் ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, இச்சங்கத்தின் தற்போதையபதிவு எண்.49/2006-ஆகும்.

மேற்படி சங்கத்தின் செயல்பாடு குறித்து ஆய்வு செய்திட முடிவு செய்யப்பட்டு, 29.5.2015-ல் ஆய்வு மேற்கொள்ள உள்ள விவரம் குறித்து 28.5.2015-ல் சங்கத்திற்கு e-mail மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்டது. ஆய்வு செய்யப்படவுள்ள விவரம் அதே நாளன்று தொலைபேசி மூலமாகவும் தெரிவிக்கப்பட்டது. சங்க அலுவலகத்தில் பணிபுரியும் திரு.ஜெயச்ந்திரன் என்பவர் தொலைபேசி வழி தொடர்பு கொண்டு 31.5.2015 வரை விடுமுறைக்ககாக சங்க அலுவலகம் பூட்டப்பட்டிருப்பதாகவும் 1.6.2015 அன்று ஆய்வினை வைத்துக்கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளார். அதன்படி 1.6.2015 அன்று மீண்டும் தொலைபேசி வழி தொடர்பு கொண்டு அன்றைய தினம் பிற்பகல் 3.00 மணிக்கு ஆய்வு செய்யப்படும் என்ற விவரம் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறே 1.6.2015 அன்று இவ்வலுவலக சார்பதிவாளர் (சீட்டு மற்றும் சங்கம்) அவர்கள் ஒரு உதவியாளருடன் சுமார் 3.00 மணிக்கு ஆய்வுக்கு சென்றபோது அங்கிருந்த காவலாளி, சங்க அலுவலகத்தை பூட்டிவிட்டு சென்றுவிட்டதாக தெரிவித்துள்ளார். இதனையடுத்து சங்க அலுவலர் திரு.ஜெயந்திரன் என்பவரிடம் சார்பதிவாளர் (சீட்டு மற்றும் சங்கம்) தொலைபேசியில் தொடர்பு கொண்டதற்கு, தனக்கு உடல் நிலை சரியில்லாததால் 12.00 மணிக்கே அலுவலகத்தை பூட்டிவிட்டு வந்துவிட்டதாக தெரிவித்துள்ளார். ஆனால், அங்கிருந்தவர்களிடம் விசாரித்ததில் அவர் சுமார் 2.00 மணி அளவில்தான் அலுவலகத்தை பூட்டிவிட்டு சென்றதாக தெரிவித்தனர். எனவே, அன்றைய தினம் ஆய்வு மேற்கொள்ளப்படாமல் சங்க சார்பதிவாளர் அலுவலகம் திரும்பிவிட்டார். பின்னர் அன்று மாலை சங்கத்திடமிருந்து ஒரு

கடிதம் இவ்வலுவலகத்திற்கு வந்தது. அதில், முன்னறிவிப்பின்றி வந்ததால் சங்க ஆய்வுக்கு பதிவேடுகளை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் உயர்நீதிமன்றத்தில் உள்ள வழக்கு தொடர்பாக சங்க பதிவேடுகள் வழக்கறிஞரிடம் இருப்பதாகவும் தெரிவித்து மேற்படி பதிவேடுகளை ஆய்வுக்கு ஒப்படைக்க ஒருவார காலம் அவகாசம் அளிக்க கோரப்பட்டிருந்ததது. இதற்கு இவ்வலுவலக கடித எண்.6994/ஈ2/2014ன் வழி 1.6.2015 லேயே ஒரு பதில் கடிதம் அனுப்பப்பட்டது. அதில், ஆய்வுக்கான முன்னறிவிப்பு 28.5.2015 தேதியில் சங்கத்தின் e-mail முகவரிக்கு அனுப்பப்பட்டதையும், தொலைபேசி வழியும் ஆய்வு செய்யப்படவுள்ள விவரம் தெரிவிக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டப்பட்டது. மேலும், சங்கப்பதிவுச்சட்டம் பிரிவு 35-ன்படி சங்கப்பதிவாளர் அல்லது வேறு அலுவலர்கள் ஆய்வுக்கு வரும் போது சங்க பதிவேடுகளை ஆய்வுக்கு ஒப்படைக்கப்படவேண்டியது சங்க கடமை என்பது சுட்டிக்காட்டப்பட்டு சங்க பதிவேடுகளை ஆய்வுக்கு தாக்கல் செய்ய மறுப்பது போன்ற சூழ்நிலை உருவாக்குவது சரியல்ல என்றும், சங்கம் கோரியவாறு ஒருவார கால அவகாசத்தில் சங்க பதிவேடுகளை ஆய்வுக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சங்கச்சட்டத்திற்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. இதன் விளைவாக 3.6.2015 தேதியில் சங்கத்தை ஆய்வு செய்ய பதிவேடுகள் தயாராக வைக்கப்பட்டிருப்பதாக தொலைபேசி வழி செய்தி வந்ததை அடுத்து 3.6.2015 அன்று சார்பதிவாளர் (சீட்டு மற்றும் சங்கம்) அவர்களால் சங்க அலுவலகத்திற்கு சென்று சங்கப்பதிவேடுகளை ஆய்வு செய்து அறிக்கை அளித்துள்ளார். அந்த அறிக்கை இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது. மேற்படி ஆய்வறிக்கையுடன் மாவட்டப்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள சங்க கோப்பும் பரிசீலிக்கப்பட்டு சங்க செயல்பாடு குறித்து கீழ்கண்டவாறு அறிக்கை பணிந்தனுப்பப்படுகிறது.

1. **வெளிநாட்டு அமைப்பின் கட்டுப்பாட்டில் சங்கம்**

சங்கத்தின் நோக்கம் மற்றும் சங்க துணைவிதிகளை பரிசீலிக்கையில் சங்கம் தன்னிச்சையாக இயங்காமல் (Netherland) –ல் இயங்கும் “STICHTING Green Peace Council” என்ற அமைப்பின் நோக்கத்தினை நிறைவேற்றும் பொருட்டு அதன் கட்டுப்பாட்டில் இயங்குவதற்காக சங்கம் உருவாக்கப்பட்டிருப்பது தெரியவருகிறது. சங்க துணை விதிக்ளின் Art 8-ல் நிர்வாகக்குழுவால் தேர்வு செய்யப்படும் சங்க தலைவர், STICHTING Green Peace Council என்ற அமைப்பால் அங்கீகரிக்கப்பட்டவராக இருக்க வேண்டும் என்பதும், மேற்படி அமைப்பினரால் அங்கீகரிக்கப்படும் நபரே நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டு சங்க நிர்வாக பொறுப்பினை அவரிடம் ஒப்படைத்திருப்பதும், சங்கத்தின் மீது (அல்லது) சங்கத்தால் தொடரப்படும் வழக்குகள் மேற்படி நிர்வாக இயக்குநர் பெயரிலேயே தாக்கல் செய்யப்படவேண்டும் என்பதும் சங்கம் மேற்கூறப்பட்ட வெளிநாட்டு அமைப்பின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது என்பதனை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

**2) சங்கத்தின் நோக்கங்கள்**

சங்கத்தின் நோக்கங்கள் தமிழ்நாடு சங்கப்பதிவுச்சட்டம் 1975 பிரிவு -3 மற்றும் தமிழ்நாடு சங்கப்பதிவு விதிகள் 1978 விதி 3-ல் வரையறுக்கப்பட்ட நோக்கங்களுக்கு உட்பட்டு அமைக்கப்பட்டு உள்ளனவா என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டது. சங்கம் கீழ்காணும் நோக்கங்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(i) To Promote the protection and preservation of the environment.

(ii)To Promote peace and nuclear disarmament.

சங்கத்தின் நோக்கங்களை செயல்படுத்துவதற்கான செயல் ஆக்கங்கள் பின்வருமாறு

a) Organize and undertake campaigns to protect the environment and further the objects of the society.

b) Identify, research and monitor issues affecting these objects, increase public awareness and understanding or related issues through the media and other educational programs; development and implement programmes and activities to aid in these objects.

c) Undertake, promote, organize and aid research, conferences, seminars and other educational activities and professional training and extend subsidies or other grants to further the objects of the society

d) Co-operative with other Green peace organizations, and with other associations having similar or compatible objects, and establish and support other associations provided that such co-operation, establishment and support is consistent and compatible with its objects, this Memorandum of Association, and the agreed license agreement concluded between the society and stichting Greenpeace council

e) Promote the enforcement and promulgation of laws and legislation and promote and undertake judicial actions in so far as such activities are consistent with its objects and with its status as a non-profit organization

f) Carry out any and all such activities and transactions as are necessary or incidental to the furtherance of these objects and the administration of this society in line with the polices of stichting Green peace council, including but not limited to publishing materials, soliciting and accepting contributions and gifts in any form, acquiring, holding, using, altering and disposing or real and personal property.

g) Borrow or raise money or receive money on deposit or loan at interest or otherwise in such manner as the Executive Committee of the Society may think fit and to secure the repayment of any such money borrowed, raised received or owing by mortgage, pledge, charge or lien upon all or any of the property, assets or revenue of the society (both present and future) in fulfillment of the objects of the society.

h) Do or cause to be done any or all such acts or things as shall be in keeping with the objects of the society and to do all such other lawful acts as shall further the objects

சங்கத்தின் நோக்கங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து துணைவிதிகளில் கூறப்பட்டுள்ளவை சங்கப்பதிவுச்சட்டம் மற்றும் விதிகளுக்கு உட்பட்டே உள்ளன.

**3. சங்க நிதி**

(1) சங்கத்திற்கான நிதி முழுவதும் வெளிநாடுகளிலிருந்து பெறப்படுகின்றன. கீழ்காணும் வெளிநாட்டு அமைப்புகள் இச்சங்கத்திற்கு தொடர்ந்து நன்கொடைகள் வழங்கி வருகின்றன.

| வ.எண் | நன்கொடை அளிக்கு அமைப்பின் பெயர் | நாட்டின் பெயர் |
|---|---|---|
| | Green peace international | Amsterdam, Netherland |

| | | |
|---|---|---|
| 1. | | |
| 2. | VOLKART Foundation | Winterthru/Switzerland |
| 3. | Green peace Australia | Sidney/Australia |
| 4. | Green peace Netherland | Amsterdam/Netherland |
| 5. | Green Peace UK | London |
| 6. | Green Peace Belgium | Brussels/Belgium |
| 7. | DKA Austria | Vienna/Austria |
| 8. | Sea brook Leaf | Sanfrancisco/ USA |
| 9. | Atul Tulshilag wale Maharastra foundation | New York/USA |
| 10 | Global Compaign for climate action | Montreal |
| 11. | URGEWALDEV | Berlin/Germany |
| 12 | Sister of Charity of Nazarath | Kentucky/USA |
| 13 | Climate works foundatin | San Francisco/USA |
| 14 | Philippa Isidore presentation victory club | London/U.K., |
| 15 | Green peace Germany | Humberg/Germany |
| 16 | Annimartha brodie | Vrindavan |
| 17 | Voddy Peddi V Surya Narayana | USA |
| 18 | Stitchting Green peace Council | Armsterdam/Netherlands |
| 19 | Green Peace fund | Washington/USA |

மேற்கூறப்பட்டுள்ள நிறுவனங்களில் 1 Green Peace International 2 Green Peace Netherland இவைகள் வருடந்தோறும் தொடர்ந்து Environmental Programmes என்ற தலைப்பன கீழ் கோடிக்கணக்கில் நன்கொடைகள் வழங்கி வருகின்றன.

(2) Green Peace India Society வெளிநாட்டில் இயங்கும் மேற்படி அமைப்புகளிடமிருந்து ஆண்டுதோறும் பெறப்பட்டுள்ள நன்கொடைகள் குறித்த விவரங்களை Form FC 3-ல் ஆண்டுதோறும் இந்திய அரசின் உள்துறைக்கு அறிக்கைகள் தாக்கல் செய்வதாக தெரிவித்து அதற்கான நகலை ஆய்வின் போது தாக்கல் செய்தள்ளனர். 2004-2005 ஆண்டு முதல் 2010-2011-ம் ஆண்டுவரை Form FC-3லும், 2011-2012-ம் ஆண்டுமுதல் 2013-2014 வரை Form FC 6-லும் வெளிநாட்டில் பெற்ற நன்கொடை விவரங்களை இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் Foreigners Division செயலாளருக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த நன்கொடைகள் அனைத்தும் சென்னை ஆயிரம் விளக்கு IDBI வங்கி கிளையில் கணக்கு எண்.005103000000888 என்ற கணக்கில் வரவு வைக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டுள்ளது.

(3) வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து 2004-2005 ஆண்டு முதல் 2013-2014-ம் ஆண்டுவரை, ஆண்டு வாரியாக பெறப்பட்டுள்ள நன்கொடை தொகை விவரங்கள் பின்வருமாறு.

| Year | Previous Balance | Receipt during the year | Total Amount |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 2004-05 | 15,66,875 | 2,31,33,460 | 2,48,09,912 |
| 2005-06 | 25,60,808 | 4,66,81,865 | 4,68,61,447 |
| 2006-07 | 27,71,445 | 9,96,84,592 | 10,32,91,856 |
| 2007-08 | 7,77,57,908 | 2,60,10,365 | 10,37,68,273 |
| 2008-09 | 6,60,31,783 | 3,38,58,314 | 9,98,90,097 |
| 2009-10 | 4,28,96,584 | 6,96,33,340 | 11,25,29,924 |
| 2010-11 | 2,54,66,051 | 5,58,65,669 | 8,13,31,720 |
| 2011-12 | 42,61,887 | 6,84,69,525 | 7,27,31,412 |
| 2012-13 | 30,08,204 | 10,14,72,417 | 10,44,80,621 |
| 2013-14 | 1,23,45,750 | 13,17,63,375 | 14,77,44,863 |

(4) இந்திய அரசிடம் Form FC3/FC-6-ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வெளிநாட்டு நன்கொடைகள் பற்றிய விவரங்களுடன் இவ்வலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வரவு,செலவு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு நன்கொடை விவரங்கள் ஒப்பிட்டு பார்க்கப்பட்டன. இந்த ஒப்பீட்டு விவரங்கள் பின்வருமாறு.

| Year | Form No. FC-3/ FC-6-ன்படி வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட நன்கொடை தொகை | சங்கப்பதிவாளரிடம் தாக்கல் செய்யப்பட்ட வரவு, செலவு கணக்கில் தெரிவிக்கப்பட்டுள்ள நன்கொடை விவரம். |
|---|---|---|
| 2004-05 | 2,31,33,460 | 2,31,33,460 |
| 2005-06 | 4,66,81,865 | 92,23,996 |
| 2006-07 | 9,96,84,592 | 2,56,86,712 |
| 2007-08 | 2,60,10,365 | 2,08,96,661 |
| 2008-09 | 3,38,58,314 | 2,97,06,047 |
| 2009-10 | 6,96,33,340 | 6,59,58,502 |
| 2010-11 | 5,58,65,669 | 5,45,39,253 |
| 2011-12 | 6,84,69,525 | 6,72,54,834 |
| 2012-13 | 10,14,72,417 | 10,14,72,417 |
| 2013-14 | 13,17,63,375 | 13,17,63,375 |

மேற்கூறப்பட்ட ஒப்பீட்டினை காணும் போது 2005-06 முதல் 2011-12-ம் ஆண்டுவரை வெளிநாட்டிலிருந்து பெறப்பட்டுள்ள நன்கொடை தொகை விவரத்திற்கும் ஆண்டறிக்கையில் சொல்லப்பட்ட நன்கொடை தொகை விவரத்திற்கும் வித்தியாசம் காணப்படுகிறது. குறிப்பாக 2005-06-ம் ஆண்டில் 4.66 கோடி தொகை நன்கொடையாக பெறப்பட்டுள்ளது. ஆனால், ஆண்டறிக்கையில் 9.23 இலட்சம் மட்டுமே நன்கொடையாக பெறப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது. அதேபோல் 2006-07-ம் ஆண்டில் 9.97 கோடி நன்கொடையாக பெறப்பட்டு ஆண்டறிக்கையில 2.57 கோடி என குறைத்து காட்டப்பட்டுள்ளது. இதே போன்று 2007-08, 2008-09, 2009-10, 2010-11 ஆகிய ஆண்டுகளிலும், வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட நன்கொடை தொகை விவரம் வரவு-செலவு அறிக்கையில் குறைத்து காட்டப்பட்டுள்ளது.

வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட நன்கொடை தொகைக்கும் ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள நன்கொடை தொகைக்கும் வித்தியாசம் உள்ளது குறித்து சங்கத்தினரிடம் விசாரணை செய்த பின்னரே உண்மை நிலை அறிய இயலும்.

**4.வங்கி கணக்கு**

(1) வெளிநாட்டிலிருந்து பெறப்படும் நன்கொடைகள் அனைத்தும் சென்னை ஆயிரம் விளக்கு IDBI வங்கி கிளையில் வைக்கப்பட்டுள்ள கணக்கு எண்.005103000000888 வரவு வைக்கப்பட்டிருப்பதாக இந்திய அரசுக்கு அளிக்கப்பட்டுள்ள Form FC3/FC6-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தவிர சங்க ஆய்வின்போது விசாரிக்கப்ட்டதில் சங்கத்திற்கு கீழ்காணும் வங்கிகளில் கணக்கு உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

1. IDBI Bank, T.Nagar, Chennai – FCRA – 005103000000888
   Local - 005103000004169
2. Yes Bank, Kasthuribai road Branch, Bangalore
   FCRA- 002284000002052
   Local- 002283800005431
3. Yes Bank, Malleswaram Branch, Bangalore
   015694600000011
4. ICICI Bank, Chamrajpet Branch, Bangalore.
   625401068671

சங்கம் செலவு செய்யும் தொகைகள் அனைத்தும் Online மூலமாக நடைபெறுகின்றன. Online Transaction தொடர்பான விவரங்கள் அச்சுப்பிரதி எடுத்து பராமரிக்கப்படுகிறது. மேற்படி செலவ Vouchers ஆய்வு செய்யப்பட்டதில் Environmental Pollution free activities-ற்காக செலவு செய்யப்பட்டிருப்பது தெரிய வருகிறது. செலவின அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டதில் 2013-14-ம் ஆண்டில், கீழ்காணும் வகையில் செலவிடப்பட்டுள்ளன.

1) Public awareness & reserves Mobilisation Campaign-க்காக ரூ.11,31,13,504/-
2) Campaigns Oceans ரூ. 96,71,016/-
3) Campaigns Support ரூ.4,72,04,665/-
4) Organisational Support ரூ.6,21,66,295/- மொத்தம் ரூ.31,93,94,425/-

Campaings-க்காக செலவிடப்பட்டுள்ளது.

**5.சங்கம் செயல்படும் இடம்**

இச்சங்கம் ஆரம்பத்தில் சென்னை பெசன்ட்நகர் 3-வது அவின்யூவில் இயங்கி வந்துள்ளது. பின்னர் சென்னை கோபாலபுரம், எல்லையம்மன் காலனி 2-வது குறுக்குத்தெரு, எண்.47-ல் உள்ள கட்டிடத்தில் இயங்கி வருகிறது மேற்படி கோபாலபுரம் விலாசத்தில் சங்க அலுவல்கள் பணியாளர்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சங்க நிர்வாகிகள் யாருடைய பொறுப்பிலும் அந்த அவலவலகம் இல்லை.

சங்கம் துவங்கப்பட்டது முதல் ஆண்டு பொதுக்குழு கூட்டம் மற்றும் செயற்குழு கூட்டம் அனைத்தும் சென்னையில் அல்லாமல் பெங்களூரில் மட்டுமே கூட்டப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் பொதுக்குழு பெங்களூரில் எங்கு கூட்டப்பட்டுள்ளது என்ற விவரம் பின்வருமாறு.

2002-03 – க்கு பொதுக்குழு கூட்டம் எண்.3360, 13B- மெயின் HAL 2nd Stage இந்திரா நகர் பெங்களூர்

2003-04 –க்கு பொதுக்குழு கூட்டம் சென்னை எல்லையம்மன் கோயில் தெரு, கோபாலபுரம், சென்னை

2004-05, 2005-06, 2006-07 – எண்.3360, 13B - மெயின் HAL 2nd Stage இந்திரா நகர் பெங்களூர்

2007-08 சங்க நிர்வாக அலுவலகம், எண்.60 வெலிங்டன் தெரு, ரிச்மாண்ட் டவுன், பெங்களூர்

2008-09 .

2010-11, 2011-12, 2012-13, 2013-14 – The United Theological College, 63 Millers road, Bangalore.

மேற்கூறப்பட்டவாறு 2003-04-ம் ஆண்டுக்கான பொதுக்குழு கூட்டம் மட்டும் சென்னையில் நடைபெற்றுள்ளது. இதர ஆண்டுகளுக்கான பொதுக்குழு கூட்டம் பெங்களூரிலேயே நடைபெற்றுள்ளது. பெயரளவுக்கு சங்க அலுவலகம் சென்னையில் வைத்துக்கொண்டு சங்க அலுவல்கள் அனைத்தும் பெங்களூரிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றன.

## 6. சங்கத்தின் அமைப்பு குறிப்பு மற்றும் துணைவிதிகள்

சங்க அமைப்பு குறிப்பில் (Memorandum) இடம்பெற்றிருக்கவேண்டிய விவரங்கள் குறித்து சங்கப்பதிவுச்சட்டம் பிரிவு 6-லும் சங்கத்துணைவிதிகளில் இடம் பெற்றிருக்கவேண்டிய விவரங்கள் குறித்தும் சங்கப்பதிவுச்சட்டம் பிரிவு 8 மற்றும் சங்கப்பதிவு விதி 6-லும் விவரிக்கப்பட்டுள்ளன. மேற்படி சட்ட பிரிவு மற்றும் விதியின்படி சங்க அமைப்பு குறிப்பு முறையாக உள்ளன. ஆனால், சங்க துணைவிதிகளில் சங்கப்பதிவு விதி 6-ன் கீழ் இருக்கவேண்டிய இனங்களில் சில இனங்கள் தொடர்பான விவரங்கள் விடுபட்டுள்ளன. அவைகள் விவரம் பின்வருமாறு

1) சங்க பதிவு விதிகளின் விதி 6 (1)

1) Class-b-ன் படி சங்க அலுவலக முகவரி விவரம் இல்லை
2) Class-c-ன் படி சங்கம் துவக்கப்பட்ட நாள் விவரம் இல்லை.

3) Class-d-ன் படி எந்த பதிவு மாவட்ட எல்லைக்குள் சங்கம் அமைந்துள்ளது என்ற விவரம் இல்லை.
4) Class-e-ன் படி சங்க அலுவல் நேரம் குறிப்பிடப்படவில்லை.
5) Class-f&g-ன் படி சங்க அமைப்பு குறிப்பில் இடம் பெற்றுள்ள சங்க நோக்கம் அதனை அடைவதற்கான செயலாக்கம் குறித்து துணைவிதியில் சேர்க்கப்படவில்லை.
6) Class-o-ன் படி ஆண்டறிக்கை மற்றும் இதர அறிக்கைகள் சங்கப்பதிவாளரிடம் கோர்வை செய்வது குறித்து துணைவிதிகளில் ஏதும் கூறப்படவில்லை.
7) Class-q-ன் படி உறுப்பினர்களுக்கு துணைவிதி நகல் வரவு-செலவு கணக்கு நகல் ஆகியன வழங்குவது குறித்தும் அதற்காக வழங்கப்படவேண்டிய கட்டணம் குறித்தும் கூறப்படவில்லை.

## 7) சங்க பதிவு விதிகளுக்கு முரணாக உள்ள விவரங்கள்

சங்கப்பதிவு சட்டம் மற்றும் சங்கப்பதிவு விதிக்கு முரணாக ஏற்படுத்தப்பட்டுள்ள துணைவிதிகளின் விவரம் பின்வருமாறு.

(1) துணைவிதி Art 2(3)-ல் உறுப்பினருக்கான சந்தா கட்டண தொகை நிர்வாக குழுவால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் என உள்ளது.

உறுப்பினர் சேர்க்கைக்கான நுழைவு கட்டணம், சந்தா கட்டணத்தொகை விவரம் நிர்வாக குழுவால் முடிவு செய்யப்படுவது அல்ல. மேற்படி கட்டணத்தொகை எவ்வளவு என்பது துணைவிதிகளிலேயே இடம்பெறத்தக்கவை ஆகும். கட்டண தொகையில் மாற்றம் தேவைப்படின் பொதுக்குழுவின் ஒப்புதலோடு மேற்கொள்ளப்படும் துணைவிதி திருத்தத்தின் மூலமாகவே செய்யப்படவேண்டும். எனவே, துணைவிதி Art-2(3) கண்ட விதிகள், சங்க பதிவு விதி 6(1) Class –J(2)-க்கு உகந்ததாக இல்லை.

(2) சங்க துணைவிதி Art- 8-ல் "There shall be a president of the society who shall be elected by executive committee members from and amongst members of the executive committee whose name shall have been approved by "STICHTHING Green peace council" என உள்ளது. அதாவது, சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுபவர் அயல் நாட்டில் செயல்படும் "STICHTHING Green peace council" அமைப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்டவராக இருக்கவேண்டும் என்றுள்ளது. சங்கப்பதிவுச்சட்டம் 1975 பிரிவு 15(3)-ன்படி நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பொதுக்குழுவில் தேர்வு செய்யப்பட வேண்டியவர்கள் ஆவர். அவ்வாறு தேர்வு செய்யப்படும் நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்குள் தலைவர் போன்ற சங்க அலுவலர்களை தேர்வு செய்துகொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. ஆனால், நிர்வாகக்ககுழுவால் தேர்வு செய்யப்படும் தலைவர் பெயர் "STICHTHING Green peace council" என்ற அமைப்பால் அங்கீகரிக்கப்பட்டவராக இருக்கவேண்டும் என்று மேற்படி துணைவிதியில் கூறப்பட்டிருப்பது பிரிவு 15 (3)-ன் நோக்கத்தினை சிதைப்பதாக உள்ளது. "STICHTHING Green peace council" என்ற அமைப்பு யாரை தலைவராக்க விரும்புகிறதோ அவர்தான் பொதுக்குழுவிலும், அதன் பின் நிர்வாகக்குழுவிலும் தேர்வு செய்யப்படவேண்டும் என்ற மறைமுக கட்டளை சங்கத்திற்கு விதிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

(3) சங்க துணைவிதி Art-9 (c)-ல் சங்கத்தின் வங்கி கணக்கு எந்த வங்கியில் துவக்கப்படவேண்டும் என்பதும் அக்கணக்கு யாரால் இயக்கப்பட (Operate) வேண்டும் என்பதும்

அவ்வப்போது நிர்வாகக்குழுவால் முடிவு செய்யப்படும் என கூறப்பட்டுள்ளது. வங்கி கணக்கினை யார் (Operate) செய்யவேண்டும்என துணைவிதிகளிலேயே குறிப்பிடாமல் அது நிர்வாக குழுவால் அவ்வப்போது குறிப்பிடப்படும் என கூறப்பட்டிருப்பது நிர்வாகக்குழு விருப்பப்பட்ட யார் வேண்டுமானாலும் வங்க கணக்கினை கையாளலாம் என்பதால், நிதி கையாளுவதில் முறைகேடு ஏற்பட்டால் அதை யாரை பொறுப்பாக்குவது என்பதில் குழப்பம் ஏற்பட சாத்தியக்கூறு உள்ளது.

(4) Art 13-ல் "Not more than 5% of Income of society would be applied for religious purpose or given to any religious institution" என உள்ளது. மத காரியங்களுக்கு சங்க நிதியை செலவிடுவதற்கு சங்க துணைவிதியில் ஏதும் கூறப்படாத நிலையில் மதக்காரியங்களுக்கு சங்க நிதியை செலவிடுவது சங்கத்தின் நோக்கத்திற்கு உட்பட்தல்ல.

## 8. ஆண்டறிக்கை தாக்கல்

இச்சங்கம் ஜீலை 2002-ம் ஆண்டில் துவக்கப்பட்டபின், ஒவ்வொரு ஆண்டும் பொதுக்குழு கூட்டப்பட்டு ஆண்டறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 2002-03 மற்றும் 2003-04 ஆகிய இரு ஆண்டுகளுக்கான அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டு ஏற்கனவே கோர்வைக்கு ஏற்கப்பட்டுள்ளன. 2004-05 முதல் 2013-14 வரை ஆண்டறிக்கைகள் கோர்வைக்கு தாக்கல் செய்யப்பட்டு கோர்வைக்கு ஏற்கப்படாமலேயே நிலுவையில் வைக்கப்பட்டுள்ளன. பொதுக்குழு கூட்டப்பட்ட நாள் ஆண்டறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் விவரம் பின்வருமாறு:-

| வ.எண். | ஆண்டு | பொதுக்குழு கூட்டப்பட்ட நாள் | ஆண்டறிக்கைகள் கோர்வைக்கு தாக்கல் செய்ப்பட்டட நாள். |
|---|---|---|---|
| 1 | 2004-2005 | 6.8.2005 | 29.3.2006 கோர்வைக்கு தாக்கல் செய்தில் தாமதம் |
| 2. | 2005-2006 | 24.8.2006 | 16.4.2007 கோர்வைக்கு தாக்கல் செய்தில் தாமதம் |
| 3 | 2006-2007 | 10.7.2007 | 24.09.2007 |
| 4 | 2007-2008 | 10.8.2008 | 28.1.2009 |
| 5 | 2008-2009 | 16.8.2009 | 2.12.2009 |
| 6 | 2009-2010 | 15.8.2010 | 16.5.2011 கோர்வைக்கு தாக்கல் செய்வதில் தாமதம் |
| 7. | 2010-2011 | 14.8.2011 | 8.2.2012 |
| 8 | 2011-2012 | 19.5.2012 | 23.8.2012 |
| 9 | 2012-2013 | 18.8.2013 | 20.9.2013 |
| 10 | 2013-2014 | 23.8.2014 | 25.11.2014 |

தமிழ்நாடு சங்கப்பதிவு விதிகளின் விதி 22-ன்படி சங்க நிதிஆண்டு முடிந்து 6-மாதங்களுக்குள் பொதுக்குழு கூட்டப்படவேண்டும். பொதுக்குழு கூட்டப்பட்ட தேதியிலிருந்து 6-மாதங்களுக்குள் ஆண்டறிக்கைகள் கோர்வைக்கு தாக்கல் செய்யப்படவேண்டும். சங்கத்தின்

நிதி ஆண்டு ஏப்ரல் முதல் மார்ச் வரையாகும். எனவே, ஆண்டு பொதுக்குழுகூட்டம் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்துக்குள் கூட்டப்படவேண்டும். அதன்படி 2004-2005ம் ஆண்டு முதல் 2013-2014-ஆம் ஆண்டுகளுக்கான பொதுக்குழு கூட்டம் உரிய காலத்தில் கூட்டப்பட்டுள்ளது. இதில் தாமதம் ஏதுமில்லை. ஆனால் 2004-2005, 2005-2006 மற்றும் 2009-2010 ஆகிய ஆண்டறிக்கைகள் கோர்வைக்கு தாக்கல் செய்வதில் மேற்கூறப்பட்டுள்ளவாறு தாமதம் ஏற்பட்டுள்ளன.

## 9. ஆண்டறிக்கைகளில் உள்ளபடி குறைபாடுகள்

கோர்வை செய்யப்படாமல் நிலுவையில் உள்ள ஆண்டறிக்கைகளில் குறைபாடுகள் உள்ளனவா என்பது குறித்து பரிசீலிக்கப்பட்டதில் கீழ்காணும் குறைபாடுகள் காணப்படுகின்றன:-

(1) 2005-06-ம் ஆண்டுக்கான ஆண்டறிக்கைகளுடன் தாக்கல் செய்ப்பட்ட பொதுக்குழு கூட்ட நிகழ்ச்சிக்குறிப்பு தட்டச்சு செய்யப்பட்ட நிழற்பட (Xerox Copy) தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் சங்கத்தலைவர் கையொப்பமிடவில்லை. மேலும், பொதுக்குழு கூட்டத்துக்கு வந்தவர்களில் வருகைப்பதிவேடு பட்டியலும் அத்தாட்சி இடாமல் Xerox Copy அளிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த ஆண்டறிக்கை கோர்வைக்கு ஏற்க தக்கது இல்லை.

(2)(i) 2006-2007-ஆம் ஆண்டுக்கான பொதுக்குழு கூட்டத்துக்கு வந்தவர்களின் வருகைப்பதிவேட்டின் பட்டியலும் Xerox Copy ஆக அத்தாட்சியின்றி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) மேலும் இந்த ஆண்டறிக்கையில் தலைவர் என்ற முறையில் திருமதி.Shobitha punja என்பவர் கையொப்பமிட்டுள்ளார். இவர் நிர்வாகக்குழுவால் எப்போது தேர்வு செய்யப்பட்டார் என்பதற்கான படிவம் VII ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. 2008-2009-க்கான ஆண்டறிக்கையிலும் இதே பிழை காணப்படுகிறது. எனவே, 2006-2007 மற்றும் 2008-2009-க்கான ஆண்டறிக்கைகளும் கோர்வைக்கு ஏற்க தக்கத்தாக இல்லை.

(3) 2007-2008 ஆம் ஆண்டுக்கான பொதுக்முகுழுவில் கலந்து கொண்டவர்களுக்கான வருகைப்பட்டியல் ஆண்டறிக்கைகளுடன் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, இந்த ஆண்டறிக்கையும் குறைபாடு உடையதாக உள்ளதால் இதுவும் கோர்வைக்கு ஏற்கத்தக்கதாக இல்லை.

4) 15.1.2007-ல் சங்க உறுப்பினர் பதிவியிலிருந்து விலகியுள்ள திருமதி.லலிதாராமதாஸ் என்பவரது பெயர் 2007-2008 முதல் 2013-14 வரை உள்ள ஆண்டறிக்களுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள உறுப்பினர் பட்டியல் படிவம் VI-ல் உறுப்பினராக காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு பொதுக்குழுவிலும் இவர் கலந்துகொண்டு வருகை பதிவேட்டிலும் இவர் கையொப்பமிட்டுள்ளார். 15.8.3207-ல் உறுப்பினர் பதவியிலிருந்து விலகியுள்ள நபரை உறுப்பினராக தொடர்ந்து காட்டியிருப்பதும், தவறான செயல் ஆகும் என்பதால் 2007-2008 முதல் 2013-2014 வரையிலான ஆண்டறிக்கைகளும் கோர்வைக்கு உகந்தது இல்லை.

## 10. நிர்வாகக்குழு மாற்றம்

தமிழ்நாடு சங்கப்பதிவுச்சட்டம் பிரிவு 15(4)ன்படி சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்றாண்டுகளுக்கு மிகைப்படக்கூடாது. பிரிவு 15(2) மற்றும் சங்கப்பதிவு விதி 17(2)-ன் படி நிர்வகக்குழுவில் மாற்றம் நிகழ்ந்த தேதியிலிருந்து 3-மாதங்களுக்குள் படிவம் VII கோர்வைக்கு தாக்கல் செய்யப்படவேண்டும். சங்க துணைவிதி Art-5ல்(2), முதல்

நிர்வாகக்குழுவின் பதவிக்காலம் ஒரு அண்டு என்றும், அடுத்து வரும் நிர்வாகக்குழுவின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகள் என்றும் உள்ளது. இதன்படி கீழ்காணும் பொதுக்குழு கூட்டத்தில் நிர்வாகக்குழு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| பொதுக்குழு ஆண்டு | பொதுக்குழு தேர்வு |
|---|---|
| 2005-2006 | 24.8.2006 |
| 2007-2008 | 10.8.2008 |
| 2009-2010 | 15.8.2010 |
| 2011-2012 | 19.8.2012 |
| 2013-2014 | 23.8.2014 |

மேற்கூறப்பட்ட 15.8.2010 மற்றும் 19.8.2012 ஆகிய தேதிகளில் நிகழ்ந்த மாற்றங்கள் தொடர்பாக படிவம்-VII மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதர மூன்று நிகழ்வுகளுக்கான படிவம்-VII தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, நிர்வாகக்குழு மாற்றம் குறித்த படிவம் -VII தாக்கல் செய்யாததால் சங்கப்பதிவு சட்டம் பிரிவு 15(2) மீறப்பட்டுள்ளது.

## 11. உறுப்பினர் சேர்க்கை மற்றும் நீக்கம்

சங்க துவங்கப்பட்டபோது கீழ்காணும் நபர்களே சங்க உறுப்பிளர்களாகவும் நிர்வாக்குழு உறுப்பினர்களாகவும் இருந்துள்ளனர்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | திரு.T.Mohan | தலைவர் | வழக்கறிஞர் | சென்னை |
| 2 | திரு.Achinvanaik | செயற்குழு உறுப்பினா | பத்திரிக்கையாளர் | புதுடெல்லி |
| 3 | திருமதி.லலிதாராமதாஸ் | செயற்குழு உறுப்பினர் | கல்வியாளர் | அலிபாக் மகாராஷ்டிரா |
| 4 | Bittu sahgal | செயற்குழு உறுப்பினர் | பத்திரிக்கையாளர் | மும்பை |
| 5 | Shobika Punja | செயற்குழு உறுப்பினர் | எழுத்தாளர் | புதுடெல்லி |
| 6 | Tara Murali | செயற்குழு உறுப்பினர் | Architect | சென்னை |
| 7 | Louis Menezes | செயற்குழு உறுப்பினர் | ஓய்வு பெற்ற அரசு அலுவலர் | சென்னை |

அதற்கு பின் உறுப்பினர்கள் சேர்த்தல் மற்றும் விலகல் நடைபெற்றுள்ளது. கீழ்காணும் உறுப்பினர்கள் சேர்க்கை மற்றும் நீக்கல் குறித்து படிவம் VII தாக்கல் செய்யப்படவில்லை.

| வ.எண் | பெயர் | சேர்க்கப்பட்ட நாள் |
|---|---|---|
| 1 | திரு.எம்.வி.ராமன் | 5.8.2005 |
| 2 | திரு.டி.நரசிம்மராவ் | 5.8.2005 |
| 3 | Ashis kothari | 29.4.2006 |

| | | |
|---|---|---|
| 4 | Bishwajit mohanty | 29.4.2006 |
| 5 | திரு.பட்டாபிராமன் | 13.11.2006 |

உறுப்பினா் சோ்க்கை குறித்து படிவம்-VII அறிக்கை கோா்வைக்கு தாக்கல் செய்யாதது தமிழ்நாடு சங்கப்பதிவுச்சட்டம் பிரிவு 15(2) மற்றும் பதிவு விதி 17(2)-க்கு மீறிய செயலாகும்.

**ஆய்வின் முடிவு**

மேற்கூறப்பட்ட விவரங்கள் அடிப்படையில்

1. Green peace India Society என்ற சங்கம் சுயமாக இயங்காமல் நெதா்லாந்து நாட்டில் உள்ள STICHTHING Green peace council சங்கத்தின் துணை அமைப்பாக அதன் கட்டுப்பாட்டில் இயங்கிவருகிறது.
2. வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட நன்கொடை குறித்து இந்திய அரசின் உள்துறையிடம் தாக்கல் செய்யப்பட்ட Form FC3/FC6-ல் தெரிவிக்கப்பட்ட தொகைக்கும் சங்கப்பதிவாளரிடம் தாக்கல் செய்யப்பட்டுள்ள வரவு-செலவு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தொகைக்கும் வித்தியாசம் உள்ளது.
3. சங்கத்தின் பதிவு அலுவலகம் சென்னையிலிருந்தாலும், சங்க கூட்டங்கள் அனைத்தும் பெங்களூரில் நடத்தப்பட்டுள்ளது. சங்க நிர்வாகம் பெங்களூரிலேயே இயங்கிவருகிறது. சென்னையில் இருக்கும் சங்க அலுவலகம், பெயரளவில் மட்டுமே உள்ளது. எந்த ஒரு சங்க நிர்வாகியின் பொறுப்பிலும் சங்க அலுவலகம் இல்லாமல் பணியாளர்களின் பொறுப்பில் உள்ளது.
4. சங்கப்பதிவு விதி 6(1) Colum (b),(c),(d).(e),(f),(g),(h),(o) & (q) ல் உள்ள அம்சங்கள் குறித்து சங்கத்துணைவிதிகளில் சேர்க்கப்படவில்லை.
5. தலைவராக யார் வரவேண்டும் என்பதும், சங்கத்தின் நிர்வாக இயக்குநராக யார் இருக்கவேண்டும் என்பது STICHTHING Green peace council அமைப்பால் முடிவு செயயப்படுவது, சங்கம் ஜனநாயக ரீதியில் உறுப்பினர்களின் முடிவுப்படி இயங்கவேண்டும் என்பதற்கு முரணாக உள்ளது.
6. ஆண்டறிக்கைகளுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள உறுப்பினர் பட்டியலில், உறுப்பினர் பதவியிலிருந்து ராஜினாமா செய்தவர்களின் பெயர்கள் உறுப்பினராக காட்டப்பட்டுள்ளதாலும், அவர்களை ஆண்டு பொதுக்குழு கூட்டங்களில் கலந்துகொண்டதாக காட்டப்பட்டிருப்பதும், வருகைப்பட்டியலில் அத்தாட்சியிடப்படாத Xerox நகலினை இணைக்கப்பட்டிருப்பதும், ஆண்டு பொதுக்குழு கூட்டம் முறையாக நடத்தப்பட்டதாக கருத இயலவில்லை என்பதால் ஆண்டறிக்கைகளை கோர்வைக்கு ஏற்க முடியாத நிலை உள்ளது.

16.6.2015

மாவட்டப்பதிவாளா் (நிா்வாகம்)
மத்தியசென்னை

16/6.